
# Dr.G.S.Kalyanasundaram Memorial School

## Chozhan Maligai, Kumbakonam

# News Letter December 2023




## *Pursue your work like meditation*

**- Shri G.K.Ramamurthy**

**Chairman - GKR Foundation**

**ISSUE- 7**

# MUN








Model United Nations (MUN) is an educational simulation program mirroring United Nations activities, offering students insights into international relations, diplomacy, and UN operations. Mr. Navamurthi, Retired Honourable Judge, graced the MUN 2023. Students from various schools participated in four committees, engaging in discussions ranging from Cybercrime and LGBTQ+ rights to global drug policies and political party matters

ஐக்கிய நாடுகள் சபையை அடியொற்றியது போன்ற மாணவர்களுக்கான ஐக்கிய நாடுகள் சபை நிகழ்வில் பல்வேறு பள்ளிகளைச் சார்ந்த 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு கொண்டனர். இதன் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற நீதியரசர் திரு.நவமூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு நல்லுரை வழங்கினார். இந்நிகழ்வில் ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாடுகள், உலக நாடுகளின் உறவு நிலைகள், பிரச்சனைகள் மற்றும் அதன் தீர்வுகள் ஆராயப்பட்டன.









# MUN







The session concluded with a successful Valedictory ceremony recognizing top performers. The event marked a significant milestone in the school's records, highlighting the success of the MUN program in fostering knowledge and diplomacy among students.

இது நான்கு குழுக்களாக செயல்பட்டன. இதில் இணையவழி குற்றச் செயல்பாடுகள் (Cybercrime and LGBTQ) மற்றும் உலகளாவிய மருத்துவக் கொள்கைகள் அரசியல் குழுக்களின் செயல்பாடுகள் மற்றும் பன்முகத்தன்மைகள் விவாதிக்கப்பட்டன. நிறைவு விழா சிறப்பாக நடத்தப்பட்டு, சிறப்பாகப் பேசிய மாணவர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன. இது நம் பள்ளியை மேலும் ஒருபடிநிலைக்கு இட்டுச்சென்றது என்றால் அது மிகையாகாது.





# 3D Printing Workshop

The one-day 3D Printing Workshop, held at our school on 05.12.2023 was conducted by the Department of Computer Science for the students of Dr G.S.K group of schools. The workshop aimed to introduce students to the fascinating world of 3D printing and foster a hands-on learning experience.

Students in Grades VI through XI received instruction to help them comprehend the fundamentals of 3D printing technology and its uses.They were encouraged to enhance their creativity and problem-solving skills. In the end, the prize winners of the 3D printing technology quiz contest, were awarded.

ஒருநாள் நிகழ்வாக முப்பரிமாண தொழிற்கல்விப்பயிற்சி நடத்தப்பட்டது. நம் கூடலூர் Dr G.S.K.மெட்ரிக் பள்ளியும் கலந்து கொண்ட இப்பயிற்சியைக் கணிப்பொறித்துறை அரங்கேற்றியது. இதில் மணவர்களின் திறன் மேம்பாடும், சிந்தனைத்திறனும் மேம்பட்டது. இதில் வினாடிவினா போட்டியும் நடத்தப்பட்டு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது.



# Career Guidance Programme

Career Guidance is a counselling program aiding students in choosing their career path. Assessing knowledge and skills, the Heads of Science, Mathematics, and English Departments conducted an interactive session for grade X students, providing valuable insights into courses and helping them plan for a successful future.








பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வை எதிர்கொள்ளவிருக்கும் மாணவர்களை நெறிப்படுத்தி வழிகாட்டும் விதமாக இந்நிகழ்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் அறிவியல், கணிதம் மற்றும் ஆங்கிலத் துறை சார்ந்த சிறப்பாசிரியர்கள் கலந்துரையாடலாக இந்நிகழ்வைச் சிறப்பாக நடத்தினர். இது மாணவர்களின் எதிர் கால வளர்ச்சிக்கும் அவர்கள் எத்துறைகளைத் தேர்ந்தெடுப்பது என்ற குழப்பத்திற்கும் ஒரு தீர்வளிப்பதாய் இருந்தது.

# Bharathiyar Jayanthi






On December 11, 2023, the school hosted a birthday celebration for the well-known Tamil poet Subramaniya Bharathiyar . Master Pagalavan, the master of ceremony honoured the well-known poet Mahakavi C. Subramania Bharathi . Ms. Kumari began the programme with a prayer, and Ms. Hannah welcomed the gathering. After the VI–VIII students' group song that promoted a love of Tamil poetry, Lucksha Vithyabharan and Harin gave enlightening remarks on "Paattukku Oru Pulavan." Master. Dikseeth presented Bharathi's essence in Hindi and Kumari. Mayuraa shared her perspectives.

பாரதியார் பிறந்தநாள் நம் பள்ளியில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. செல்வன் பகலவன் தொகுத்து வழங்க, செல்வி ஹேனா வரவேற்புரை வழங்க குழுப்பாடலோடு விழா இனிதாகத் துவங்கியது. செல்வன் லக்ஷய வித்யாபரன், செல்வன் ஹரின் இருவரும் பாரதியார் பற்றிய மிகச் சிறந்த உரையை வழங்கினர். மேலும் செல்வன் தீக்ஷித் இந்தியில் மிகச் சிறந்த உரையை வழங்கினார். செல்வி மயூராவும் தமது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டு நம் சிந்தனைக்கு விருந்தாக்கினார்.






# Bharathiyar Jayanthi





The day showcased various talents, drawing praise from Vice Principals Mr. Paramaguru and Mr. Balaji. Siblings, Master. Srijan and Kumari. Sreja received 'Archery World Recorder' awards, while Kumari.Jagadeeswari and Kumari. Malarvizhi won 'The State Level Scholarship Quiz Tamil Competition.' Ms. Ushakumari and the teachers of the Tamil Department commended the participants. The celebration included a skit on 'Bharathiyar's Biography' by grade IV-VII students, providing insight. The program concluded with a Vote of thanks and the National Anthem.

இந்நாளில் செல்வன் ஸ்ரீஜன், செல்வி ஸ்ரீஜா ஆகியோர் புரிந்த வில்வித்தை உலக சாதனை மற்றும் மாநில அளவிலான சாதனைக்காக துணைமுதல்வர்கள் திரு பாலாஜி, திரு பரமகுரு மற்றும் அறிவியல் துறைத்தலைவர் திருமதி உஷா குமாரி ஆகியோரால் நினைவுப்பரிசு வழங்கி, பொன்னாடை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இறுதியாக பாரதியாரின் வாழ்வியல், நாடகமாக நடிக்கப்பட்டு நன்றி உரையோடு விழா இனிதே நிறைவடைந்தது.







# Child Safety - Awareness Programme








Dr. GSK places a high priority on the security of students. On December 15, 2023, it hosted a Child Safety Awareness Program with specialists Ms. Aditi and Ms. Swetha.
The session aimed to raise awareness about child safety, with speakers addressing teachers from grades 3-12, engaging with students in grades IX and XI, and conducting one-on-one meetings with students in grades 6-8. The program showcased Dr. GSK's commitment to a safe learning environment for students.

Dr.G.S.k குழந்தைப் பாதுகாப்பையே முதல் நிலைக் கல்வியாகத் தன் கையில் கொண்டது. டிசம்பர் 15 அன்று திருமதி அதிதி மற்றும் திருமதி ஸ்வேதா தலைமையில் இந்நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது. 3 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள ஆசிரியர்களுக்கும் 9 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும், பாதுகாக்கும் முறை பற்றியும், மாணவர் பாதுகாப்பு பற்றியும் மிக அழகாக விளக்கப்பட்டது. 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்குத் தனித்தனியாகவே பாதுகாப்பின் நன்மை குறித்துக் கூறப்பட்டது.







# Wrap-Up Session for Board Going Students

On 15 December 2023, Grade 12 students turned up for Ms Manjula Dhanapal's biology wrap-up class . The lecture was instantly brought to life with a lively round of one-word questions, and notable replies were also highlighted. The goal was to review and get a hundred marks using the CBSE test as a guide.
Ms Shyamala Sekar conducted a special wrap-up session on Mathematics for XII-grade students. The session was a beacon to our students that clarified most of their doubts. Moreover, the session instilled confidence in them to take up the forthcoming board examination with audacity.





டிசம்பர் 15 அன்று 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வை எதிர்கொள்ளும் மாணவர்களுக்காக திருமதி. மஞ்சுளா தனபால் மிகச்சிறந்த ஓர் உயிரியல் பாடம் சார்ந்த அமர்வை எம்மாணவர்களுக்கு வழங்கினார். தேர்வின் முக்கிய பகுதிகள், எளிமையாகத் தேர்வாகும் வழிமுறைகள், 100 மதிப்பெண்கள்எடுப்பதற்கான வழிமுறைகள், மீண்டும் மீண்டும் கேட்கப்படும் வினாக்கள் ஆகியவை விவாதிக்கப்பட்டன.மாணவர்கள் தம் இலக்கை அடைய இவ்வமர்வு ஒரு தூண்டுகோலாக அமைந்தது.

# Science Exhibition








CBSE organized a "SCIENCE EXHIBITION" on Dec 12th & 13th at RMK Sr. Sec. School, Thiruverkadu, focusing on the theme "Science and Technology for Society." The sub-themes included Health, Life (Lifestyle for Environment), Agriculture, Communication and Transport, and Computational Thinking. The event featured two categories: Category I for junior students (Classes 6-8) and Category II for senior students (Classes 9-11). A total of 150 schools participated. Among them, our students of Grade XI, Rohith and Mukundan, showcased their project under the mentorship of Mr. Venkat Kumar. Their project centred on Communication and Transport and aimed to alleviate bus overcrowding using IoT concepts, leading to reduced diesel consumption, minimized bus damages, and enhanced travel comfort for women and disabled individuals.

திருவேற்காடு RMK உயர்நிலைப்பள்ளியில் CBSE ஆல் நடத்தப்பெற்ற அறிவியல் கண்காட்சி நடைப்பெற்றது. ”சமுகத்திற்கான அறிவியல் தொழில்நுட்பம்” என்ற தலைப்பில் நடத்தப்பெற்ற இக்காண்காட்சியில் உடல்நலம், சுழலும் வாழ்வும், வேளாண்மை, தகவல் தொடர்பும், போக்குவரத்தும் கணக்கீட்டுச் சிந்தனை போன்ற உட்தலைப்புகள் இடம்பெற்றிருந்தன. 150 பள்ளிகள் பங்கேற்ற இப்போட்டியில் 11 ஆம் வகுப்பு மாணவர்களான செல்வன் ரோஹித் மற்றும் செல்வன் முகுந்தன் நம் பள்ளியின் சார்பாக கலந்து கொண்டனர். ஆசிரியர் திரு வெங்கட் குமார் அவர்களின் வழிகாட்டுதலில் தகவல் தொடர்பும் போக்குவரத்தும் என்ற தலைப்பில் இவர்களின் அறிவியல் செயல்திட்டம் அமைந்திருந்தது. இதன் மையக்குறிக்கோள்கள் பேருந்தில் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்தும் விதமாகவும் எரிபொருள்சிக்கனம்,சேதங்கள் தவிர்த்தல், பெண்களும் மாற்றுத்திறனாளிகளும் பாதுகாப்பாகப் பயணம் செய்தல் போன்றவையாகும்.







# State level competition on "Tamil Literary Ability"

The Tamil Nadu government conducts the Tamil Literature Aptitude Test annually to showcase students' skills. The first 1500 students who pass the test receive a scholarship of Rs. 1500 for two years. The selection for this year occurred on 15.10.2023, with 2,37,000 students participating. Thirty students from our school took the exam. Our students Selvi Jagadishwari and Selvi Malarvizhi brought laurels to our institution by scoring 97 and 94 out of 100, respectively.





மாநில அளவில் நடத்தப்பெற்ற கல்விஉதவித்தொகை தமிழ் இலக்கியத் திறனறித்தேர்வில் 11 ஆம் வகுப்பு மாணவர்கள் 28 பேர் கலந்து கொண்டனர். மாநிலம் முழுவதும் சுமார் 2,37,000 பேர் கலந்து கொண்ட இத்தேர்வில் நம் பள்ளி மாணவிகள் செல்வி ஜெகதீஸ்வரி 97/100, செல்வி மலர்விழி 94/100 மதிப்பெண்கள் பெற்று முதல் 1500 இடங்களுக்குள் இடம்பெற்று மாத உதவித்தொகையாக 1500/- வீதம் 2 வருடங்களுக்குப் பெறுவதற்குத் தேர்வாகியுள்ளனர். மேலும் பாரதியார் ஜெயந்தி விழாவன்று, தேர்வில் வெற்றிபெற்ற செல்வி ஜெகதீஸ்வரி மற்றும் செல்வி மலர்விழியை நம்பள்ளியின் தமிழ்த்துறைத்தலைவர் திருமதி இராஜலெட்சுமி, துணைத்தலைவர் திருமதி மீனாட்சி மற்றும் முதன்மை ஆசிரியர்களான திருமதி நிர்மலா, திருமதி மல்லிகா ஆகியோரும் பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசுகள் வழங்கி கௌரவித்தனர்.

# Personality Development Class

Mr M I Babu of Department of English conducted a Soft Skills Programme on "Manners and Etiquettes" for 3rd-8th-grade students, focusing on social skills, empathy, and respectful behaviour. The initiative aims to equip students with valuable social skills, preparing them for personal and social success. Cooperation from teachers, parents, and the community further reinforces the positive impact. The programme was initiated and organized by the Department of English.








3 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஆளுமை பண்பு வளர்ச்சிக்கான மிகச்சிறந்த அமர்வுகளை திரு. பாபு அவர்கள் ஆங்கிலத்துறையின் சார்பில் நிகழ்த்தினார். இதில் நாகரிகமாக உரையாடுதல், பழகுதல், உடுத்துதல், அடிப்படைப் பண்புகளான அன்பு, இரக்கம், கருணை,, ஆங்கிலத்தில் பேச்சாற்றலை வளர்க்கும் வழிமுறை, சமூகத்தில் மாணவர்களின் பங்களிப்பு, பெற்றோர், ஆசிரியரைப் போற்றுதல் என பன்முகங்களில் இவ்வமர்வுகள் மிகச்சிறப்பான முறையில் நடத்தப்பட்டது.

# "Hidden Gems Olympiad: Revealing Talents, Unleashing Skills"

Dr. G.S.K'ians compete in several of Olympiads conducted on by SILVER ZONE, SOF, and Unified Council. This year, 635 students participated in Olympiad, which took place in the months of November, December & January.









SOF,UNIFIED COUNCIL, SILVER ZONE ஆகிய அமைப்புகள் நம் பள்ளி மாணவர்களுக்காக பல்வேறு ஒலிம்பியாட் போட்டிகளை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. இதில் இவ்வாண்டு 635 மாணவர்கள் பங்கேற்றனர். இதனை முன்னின்று மிகச்சிறப்புடன் நடத்தி வருபவர் திருமதி. ராஜேஸ்வரி மற்றும் நம் பள்ளி ஆசிரியர்கள்

# SaPa Assessment report 2023








SaPa, Bangalore, conducted music assessments for Grade I to VII students on December 20-21, 2023. Ms. Savitha and Ms. Bindhumathi, evaluated nearly 900 students on their understanding of SaPa syllabus songs, covering notes, thalam, and shruthi. Assessment of students performance aimed to enhance their musical knowledge across grades.

1 முதல் 7 ஆம் வகுப்பு வரை நம் பள்ளியின் SaPa இசை மாணவர்களை மதிப்பிட பெங்களூரில் இருந்து திருமதி சவிதா மற்றும் திருமதி பிந்துமதி ஆகியோர் வந்திருந்தனர். இவர்கள் 900 மாணவர்களை மதிப்பீடு செய்து அவர்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டினர். பாடத்திட்டம், அவர்களின் திறன், தாளம், சுருதி ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு அமைந்திருந்தது







# Rolling Triump

Through extensive training programs and cutting-edge facilities, Dr. GSK Sports Academy has dedicated itself to promoting excellence in sports. Its goal is to develop athletes who, in addition to their performance, exemplify the qualities of sportsmanship, discipline, and holistic well-being. Ms Gaanyasri of Grade 12 has brought honours to our institution with her outstanding achievement of earning a gold medal in the 61st National Skating competition, held at Chandigarh and Chennai. Her dedication to training for over two and half years, specifically for roller-skating, along with a total of 5 years of training at the national level, reflects her hard work and commitment to the sport. Starting from grade 2 and consistently practising skating shows a long-term passion and perseverance in honing her skills. Competing at the national level in events conducted by the Roller-Skating Federation of India and TNRSA is a significant achievement and highlights Gaanyasri's excellence in roller skating.










நம் பள்ளியின் 12 ஆம் வகுப்பு மாணவி செல்வி கன்யாஸ்ரீ தேசிய அளவிலான ரோலர்ஸ்கேட்டிங்போட்டியில்தங்கப்பதக்கத்தினை வென்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.  5 ஆண்டுகளின் கடினமான விடாமுயற்சியும், பயிற்சியும் இவருக்கு வெற்றியைப் பெற்று தந்திருக்கிறது. 2ஆம் வகுப்பில் துவங்கிய பயணம் இன்று தேசிய அளவில் இவரை நிலை நிறுத்தி இருக்கிறது.TNRSAவால் நடத்தப் பெற்ற இப்போட்டியின் சாதனை கன்யாஸ்ரீக்கும், நம் பள்ளிக்கும்புகழையும், பெருமையையும்தேடித்தந்தது என்றால் மிகையில்லை.

# National Mathematics Day-2024

Our school commemorated National Mathematics Day on Srinivasa Ramanujan's birthday, emphasizing the importance of mathematics. A Model Making Competition for grades 3 to 8 allowed students to exhibit their mathematical understanding creatively. Internal and external judges evaluated the models for creativity, accuracy, and presentation. The event served as a hands-on platform for students to express their knowledge visually.
Ms Ushadevi (M.Sc., M.Phil.) ensured a fair assessment alongside internal judges, enriching the celebration with diverse perspectives.








தேசிய கணித நாளான ஸ்ரீநிவாச ராமானுஜம் பிறந்த நாளை நம் பள்ளி சிறப்பாகக் கொண்டாடியது. அதன் நினைவாக கணித மாதிரிகள் உருவாக்கும்போட்டி 3முதல்8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குக் கணிதக் கண்காட்சியாக நடத்தப்பட்டது. திருமதி உஷாதேவி (M.sc., M.Phil) மாணவர்களின் மாதிரிகளைப் பார்வையிட்டு சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்தார். இந்நிகழ்வு மாணவர்களின் புத்தாக்கத்திற்குச் சிறந்த அடித்தளமாக அமைந்தது.

# National Mathematics Day-2024

In collaboration with National Mathematics Day celebrations, grades 9 and 11 students engaged in a paper presentation competition, showcasing their research and communication skills. Each participant/group delivered well-prepared papers on diverse topics, contributing to knowledge dissemination and critical thinking. The presentations, which covered a wide range of topics, demonstrated students' depth of knowledge and analytical skills. In this insightful event, two judges provided constructive remarks to foster continuous academic improvement based on presenting skills and subject-depth evaluations.




9 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்குத் தேசிய கணிதத் தினத்தை முன்னிட்டு தாள்ஒப்படைப்புப் போட்டி நடத்தப்பட்டது. மின்னணு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாணவர்கள் தம் ஆய்வுகளை ஒப்படைத்தனர். இது பல்வேறு நோக்கிலான மாணவர்களின் சிந்தனையைத் தூண்ட மிகச்சிறந்த ஒரு களமாக அமைந்தது. இரண்டு நடுவர்கள் பங்கேற்று மிகச்சிறந்த ஒப்படைப்பைத் தேர்ந்தெடுத்து மாணவர்களைப் பாராட்டினர்.

# Vaccination Camp

Our Dr. G.S.K Memorial School is dedicated to the well-being of our students, making it our primary responsibility to ensure their safety. A physician from Patteeswaram Health Center and two nurses performed immunizations and health examinations at our school on December 16, 2023. Kids in grades 1 and 2 who finished five years received the DPT vaccination, and kids in grade 5 who completed ten years received the TD vaccine with parental permission. Following the vaccinations, teachers gave the kids paracetamol tablets and monitored them all day.







டிசம்பர் 16 அன்று பட்டீஸ்வரம் அரசு மருத்துவமனை செவிலியர்கள் நம் பள்ளிக்கு வந்து 5 வயது மாணவர்களுக்கு DPT ஊசியும் 10 வயது மாணவர்களுக்கு TD ஊசியும் போட்டனர். இது பெற்றோர்களின் அனுமதியோடு நிகழ்த்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆசிரியர்கள் மாணவர்களைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டனர்.

# Christmas Day Celebration









On December 22nd, our school radiated festive joy during the Christmas Day Celebration at the Primary Block from 9:40 to 10:30 a.m. It was a heart warming occasion that drew parents, teachers, and students together.
It featured enchanting elements, including prayer songs, inspiring speeches and dynamic dance performances. Soulful Christmas tunes, created a joyful atmosphere and set the tone. Students delivered a noteworthy speech, reflecting on the essence of Christmas – themes of love, kindness, and gratitude. Lively dance performances and a visit from Santa Claus added flair, showcasing students' creativity. Festive decorations adorned the campus, fostering a warm and inviting atmosphere. Beyond merriment, the celebration united the school community, leaving a memorable imprint.

டிசம்பர் 22 நம் பள்ளியில் கிருஸ்துமஸ் விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மாணவர்கள் கிருஸ்துமஸ் கொண்டாடப்படுவதன் நோக்கம், இயேசுவின் சிறப்பு ஆகியவற்றை உரையாகவும் பாடலாகவும் நாட்டியமாகவும் வெளிப்படுத்தினர். அன்பு, கருணை, நன்றிஉணர்வு ஆகியவற்றை உணரும் தருணமாக இவ்விழா அமைந்தது. 20க்கும் மேற்பட்ட கிருஸ்துமஸ் தாத்தாக்கள் திடீரென விழாவில் தோன்றி மாணவர்களுக்குப் பரிசளித்தது மிகச் சிறப்பாக அமைந்தது. பள்ளியின் ஒற்றுமைத்தன்மையை இவ்விழா பறைசாற்றியது.







# Memory Contest For KG

Dr. GSK consistently nurtures young minds, emphasizing quality improvement. A memory contest for KG students was conducted to assess their memory, retention, and speed recognition. Through observational recall of objects, enthusiastic young minds participated joyfully, showcasing their cognitive skills and earning well-deserved prizes for their achievements.












GSK பள்ளி மாணவர்களின் திறன்களைக் கண்டறிவதிலும், அதனை ஊக்குவிப்பதிலும் நம் பள்ளி எப்போதுமே தனி ஆர்வம் செலுத்துகிறது. இதில் KG வகுப்புகளில் நினைவுத்திறன் ஆய்தல், வேகத்தை மேம்படுத்தல், நினைவுகூறுதல் போன்ற நிலைகளில் போட்டிகள் நடத்தப்பட்டு மாணவர்கள் தம்முடைய பல்முனைத் திறன்கள் வெளிப்பட நம் பள்ளி வழிகாட்டியது.

# Origami Internal Competition (Grade 1&2)

At Dr GSK, we foster self-discovery in students through integrated activities and competitions. On December 6, first- and second-graders participated in an internal origami competition that gave them a chance to showcase their artistic abilities. Participants enthusiastically engaged in this intellectually interesting endeavour, stoking excitement with assigned themes.




1 மற்றும் 2 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஓரிகேமி போட்டிகள் டிசம்பர் 6 அன்று மிகச் சிறப்பாக நடத்தப்பட்டன. மாணவர்களின் பல்வகைக் கலைத் திறன்களை வெளிப்படுத்தவும், உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணரவும் இப்போட்டிகள் உறுதுணை செய்தன.

# Sync With Science Internal Competition (Grades 3-5)


On December 14, third- through fifth-graders participated in an internal competition with the theme "Sync with Science". Topics were assigned according to students' proficiency. Kids threw in their best efforts and participated with enthusiasm.










Lorem ipsum dolor sit amet, consectetur adipiscing elit Nam

"Sync with science" என்ற தலைப்பில் டிசம்பர் 14 அன்று 3 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குப் பள்ளி அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் மாணவர்கள் ஆர்வமாகப் பங்கேற்று தம் திறன்களை வெளிப்படுத்தினர்.

# Wrap-up session – Economics

On December 22, 2023, a Wrap-up Session for Economics, led by Mr.Vishwanathan, was attended by 35 out of 40 Grade 12 students. The session covered the topics of Income determination, employment, and Government Budget. The discussion emphasized key answers for repeated board topics with an explanation of curve-drawing methodologies. The session concluded with a focused CBSE exam-based revision, aiming for centum scores. The participants expressed their gratitude.







டிசம்பர் 22 அன்று நம் பள்ளியின் 12 ஆம் வகுப்பு பொருளியல் மாணவர்களுக்குத் திரு.விஸ்வநாதன் அவர்கள் சிறப்பான ஒரு அமர்வை நடத்தினார். இதில் வருமான நிர்ணயம், வேலைவாய்ப்பு, அரசின் வருட வரவு செலவுத் திட்டங்கள் என அனைத்தும் மாணவர்களின் பாடத்திட்டம் சார்ந்து நடத்தப்பட்டன. பொதுத் தேர்வினை எதிர்கொள்ளும் முறைகள், நோக்கம், கருதுகோள்கள் என அனைத்தையும் அவர் திறம்பட விளக்கினார்.

# Margazhi Uthsav

On December 27th, 28th, and 29th, 2023, Dr G S Kalyanasundaram Memorial School in Chozhan Maligai, Kumbakonam, organized a three-day Margazhi Maha Utsav to nurture culture and tradition in young minds. The event happened in the Acoustic Chamber and featured cultural performances by students from different grades. The event began with an elegant invocation dance by Grades 7 & 8 and continued with musical performances by Grades V - VIII, Grade VI -III, and Grade IX & XI.




ஒவ்வொரு ஆண்டும் நம் பள்ளியில் மார்கழி மகா உற்சவம் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.
இவ்வாண்டு கடந்த டிசம்பர் 27,28,29 ஆகிய மூன்று நாட்களும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.
முதல் நாள் திருமதி. ஹம்ஸா காயத்ரி அவர்களின் இன்னிசையுடன் விழா இனிதே துவங்கியது.

# Margazhi Uthsav

The musical extravaganza continued with a classical fusion dance by Grades VIII & IX students and vocal performances by Dr. GSK matric School students. The three-day music festival concluded with a note of gratitude and Subha Mangalam. Dr. GSK showcased its commitment to student creativity and community through an event attended by students, teachers, and parents. The event was a significant part of the school's instructional and cultural programs, resulting in a grand success.









இளம் மாணவர்களின் உள்ளத்தில் கலாச்சார பண்பாட்டை வளர்க்கும் ஓர் உன்னதத் திருவிழாவாக இது நிகழ்த்தப்பட்டது. வகுப்புகள் 3 முதல் 11 ஆம் வகுப்பு வரை உள்ள பல மாணவர்கள் இசை, நாட்டியம், பாடல் எனத் தன் பல்வேறு திறன்களை வெளிப்படுத்தினர். நம் மெட்ரிக் பள்ளி மாணவர்களும் பங்கேற்றது இதன் தனிச்சிறப்பு. மாணவர்களின் கலை ஆர்வத்தை தூண்டும் விதமாக விழா அமைந்தது.

ISSUE NO. 07 December 2023

# Dr. GSK's Reading Oasis: Where Learners Thrive

"Reading maketh a full man" - Francis Bacon

To enhance students' mental strength, a reading corner with a collection of books, journals, magazines, comics, and newspapers in English and Tamil, has been established on the school campus. Students are encouraged to read daily, fostering a spontaneous love for reading. This initiative process is notable because of the contributions made by teachers and students.








வாசித்தல் என்பது சுவாசித்தல் போல இருக்க வேண்டும் என்பதில் நம் பள்ளி உறுதியாய் இருக்கிறது. அதற்காக ஏற்படுத்தப்பட்டது வாசிப்புப்பகுதி. இதில் இதழ்கள், பத்திரிக்கைகள், செய்தித்தாள்கள் மற்றும் பலநூல்கள் வைக்கப்படுகின்றன. மாணவர்களின் ஓய்வு நேரம் இங்குப் பயனுடையனவாக மாறுகிறது. இது மாணவர்களுக்காக ஆசிரியரும் மாணவர்களும் இணைந்து நடத்துவது.

# PTM 2023

On December 30, 2023, a Parent-Teacher Meeting (PTM) took place with significant parent attendance. The feedback received was overwhelmingly positive, with parents expressing appreciation for the management's persistent efforts toward the well-being of their children. The constructive dialogue during the PTM served as a testament to the collaborative spirit between parents and educators, fostering a supportive environment for the holistic development of the students.











டிசம்பர் 30 பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு சிறப்பான நிகழ்வாக அமைந்தது. பெற்றோர்கள் பள்ளி முன்னெடுக்க வேண்டிய கருத்துகளையும், ஆசிரியர்கள் பெற்றோர்கள் முன்னெடுக்க வேண்டிய கருத்துகளையும் பகிர்ந்து கொண்டனர். மாணவர்கள் மற்றும் பள்ளியின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை இது உறுதி செய்தது.

## Advisory team :

Mr.Paramaguru,
Vice Principal

Mr.Balaji,
Vice Principal

151

## Editorial Team :

Mr. Jayaraj,
Dean Language

Ms. Nisha
HOD English

Ms. Rajalakshmi
HOD Tamil

Mr. Babu
PGT English

Ms. Meenakshi
PGT Tamil

Ms. Rekha
PGT English

Mr.Senthil Arun
TGT English

Ms. Dharani Vignesh
PGT English

## Marketing & Branding :

Ms.Anusha

Ms.Jayalakshmi

## Design :

Ms.S G Kavitha

Ms.Sivagami

Mr. Sethuraman

## Photography :

Mr. Gopalakrishnan

Founded & Managed by GKR Foundation